**இலங்கை நீதிவான்களின் நிறுவனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரிய-தாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக்

கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்றில் கடந்த காலப்பகுதி தொடர்பாக ஒப்பீட்டுரீதியான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது ஒப்பீட்டு ரீதியான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்று அதன் பாதீட்டு பெறுமதிக்கும், உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே இணக்கம் ஒன்று அல்லது தனியாக நிதிக்கூற்றுக்களாக அல்லது நடப்பாண்டின் காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களில் பாதீடு நிரலாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் பாதீட்டு தகவல்களை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட் காலம் என்பன குறைந்தது ஒவ்வொரு வருட அறிக்கையிடல் | இது தொடர்பாக நீதி அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிவான்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 02 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியின் இறுதி திகதியின் போது மீளாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 49,234,914 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் பரிந்துரை கிடைத்ததன் பின்னர் அதன் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,517,995 ஆன நீதி தரவு களஞ்சியம் (Legal Data Base) சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பந்தி இலக்கம் 117 இல் குறிப்பிடப்பட்ட பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த சட்ட தரவு களஞ்சியம் சொத்தொன்றாக 2017 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த துடன் தற்போது சகல சொத்துக்கள் மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையின ால் அதன் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| i. | பயன்தரு ஆயுட்காலம் குறிப்பாக வகைப்படுத்தப்பட்டு பயன்தரு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு விகிதம் | | |
| ii. | பயன்தரு ஆயுட் காலத்துடன் கற்பனை சொத்துக்களுக்காக பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு முறைமை | | |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு வரை செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற தரவு களஞ்சிய முறைமை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பந்தி இலக்கம் 108 பிரகாரம் பயன்தரு ஆயுட்காலம் தொடர்ச்சியாக காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையாக இருந்தமை மற்றும் தரம் தொடர்ச்சியாக காணப்படுகின்றதா என்பதை முடிவு செய்வதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் போது மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக காணப்படாத பயன்தரு ஆயுட்காலம் நிலைமையில் இருந்து செயற்படு நிலைக்கு மாற்றப்படுவதாயின் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்குகளின் மதிப்பீடு மாற்றம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 3,517,995 இனால் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் நிதிச் செயலாற்றல் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | தற்போது சகல சொத்துக்களும் மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால் அதன் பரிந்துரை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பந்தி இலக்கம் 44 இன் பிரகாரம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற மானியங்கள் சொத்துக்கள் மற்றும் வருமானங்களாக இணங்கான வேண்டியிருந்த போதிலும் ரூபா 518,400 | இது 2021 ஆம் ஆண்டின் பெப்ரவரி 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் நிதியாண்டிற்குரிய கணக்காய்வு பரிந்துரையின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் மூலதன மாணியமாக இணங்கண்டு குறித்துரைத்த பிரகாரம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் மாணிய சொத்துக்கள் மற்றும் வருமானங்களாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆன மூலதன மானிய பெறுவனவு இந்த கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இணங்காண்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலக்கழிவு செய்து பிற்போட்ட வருமானம் (நிதியாண்டிற்கு உரிய) இனங்காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இணங்காணப்படல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பந்தி இலக்கம் 41 இற்கு முரணாக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு கட்டணம் மிகை ஒதுக்கம் ரூபா 480,000 மீளாய்வாண்டின் நிதிக்கூற்று தொகுதியின் போது இணங்காண்பதற்கு பதிலாக திரண்ட பற்றாக்குறையில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் திரண்ட பற்றாக்குறை ரூபா 480,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு கட்டணம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதும் உரிய ஆண்டுகளின் போது செலவினத்திற்கான உரிய நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே வேறுபாடுரூபா 480,000 ஆக இருந்தமை அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வேறுபாடுகள் நிதிக்கூற்றுக்களில் இணங்கான நடவடிக்கை எடுத்தல் |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி இலக்கம் 80(இ) இன் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற திகதியில் இருந்து 12 மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதற்கு குறித்துரைத்த பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்பாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் பணிக்கொடை ஒதுக்கங்களுக்குரிய ஒட்டு மொத்த பெறுமதியான ரூபா 1,107,555 தொகை நடைமுறை பொறுப்பின் கீழ் இணங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவகத்தின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா | 2023 ஆம் ஆண்டில் குறித்துரைத்த பிரகாரம் ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

பொறுப்புக்களாக பணிக்கொடை ஒதுக்கங்களாக இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்பட ாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்க ள் | 3,057,383 | கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் உறுதிப்படுத்து வதற்குரிய உறுதிச்சீட்டுக் கள், மதிப்பீட்டு அறிக்கைகள் | இதில் கோரப்பட்டுள்ள தகவல்கள் 10 வருடங்களை விட பழையதாக இருந்தமையால் அது கொள்வனவு செய்யப்பட்ட பட்டியல் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் நடைமுறையில் முடியாதிருந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரித்து, இருப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய அறிக்கையை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சட்டத் தரவு களஞ்சிய முறைமை | 3,517,995 | நிலையான சொத்துப் பதிவேடு | அந்த நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துப் பதிவேட்டில் சொத்துக்கள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தி ன் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை வரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1503/13 என்ற அதிவிசேட வர்த்தமானி | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதும் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 158,100 கொடுப்பனவுக்காக | எதிர் காலத்தில் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள் ளது. | முத்திரை வரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2017 யூன் 28 ஆந் திகதி இலக்கம் 01/2017 இல் என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | சோத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் சகல நிதியல்லா சொத்துக்களையும் பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்குரிய 2022 ஆம் ஆண்டின் தகவல்ககள் கொம்ட்ரோலர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குரிய நாளது வரையாக்கப்பட்டுள்ள தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனரலுக்கு அனுப்புவதற்கு தயார்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ள வேண்டிய ஒட்டு மொத்த பதவியணியினருக்காகவும் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயலாற்றல் அறிக்கை கைச்சாத்திடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(i) ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனம் பயன்படுத்துகின்ற இரண்டு வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | ஒரு வாகனத்தின் உரித்து நிருவனத்திற்கு கையளிப்பதற்குரிய ஆவணங்கள் 2022 செப்தெம்பர் 22 ஆந் திகதி நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் | நிறுவனத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரிடம் | நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டின் பிணை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி நிதிப்பிரமாணம் 315(1), 809 | இருந்து பிணையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,925,257 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,035,725 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,889,532 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் மானியம் ரூபா 2,040,355 இனால் குறைவடைந்தமை மற்றும் மாநாடுகள் மற்றும் பயிற்சி செலவினம் ரூபா 4,673,505 இனாலும், சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 1,116,071 இனாலும், காகிதாகிகள் மற்றும் மொழிபெயர்ப்பு, மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்கள் ரூபா 622,750 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி 4.2.1 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடகாலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்கை செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் நிறுவகத்தால் அவ்வாறான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகையின் வழிகாட்டி கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,112,225 செலவினத்தில் சட்டத்தரவு களஞ்சிய முறைமையொன்றை கொள்வனவு செய்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகள் | Bell Solution நிறுவனம் அதுவரையில் இந்த நிறுவனத்தின் இணைய தளம், மேல் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றங்களை உள்ளடக்கிய அரசாங்கத்தின் நிறுவனங்களில் இணைய தளத்தில் பேணிச் செல்வதற்காகவும், இந்த நிறுவனங்களில் இணைய | அரசாங்கத்தின் பெறுகையின் வழிகாட்டி கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவையில் பிரதான கொள்கை ஆவணங்களாக பெறுகைக் குழு அறிக்கை தொழிற் மதிப்பீட்டுக்குழு அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | தளங்களில் SLJInet Database கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளமையும் அதுவரையான அந்த தகவல்களை அடிப்படையாக கொண்டு அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற சட்ட தரவு களஞ்சிய முறைமையில் காணப்படுகின்ற வழுக்களை சரி செய்வதற்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழுவொன்று நியமிக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிப்பதற்குரிய பணிப்பாளர் சபைக்குரிய கூட்ட அறிக்கைகள் எதுவும் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டில் இருந்து SLJInet Database நாளது வரையாக்குவதற்குரிய நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படுகின்றது. USAID CORE Justice செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு முதல் நீண்ட காலமாக ஆய்வு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது SLJInet Database நாளதுவரையாக்குவதற்காக செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆந்த செயற்திட்டம் நீதியமைச்சிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அதன் சாத்தியவளத்தை அளவிடுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் SLJInet Database விரைவாக மீண்டும் பயன்பாட்டுக்கு எடுக்க கூடிய நிலைக்கு உட்படுத்துவதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இதற்காக நிதியம் வெளிநாட்டு பங்களிப்பு ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டி கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் சந்தர்பத்தில் இருந்து முடிவுறும் வரை | நிறுவனத்தின் பெறுகைகள் திட்டம் தயாரித்திருந்ததுடன் ஒவ்வொரு கட்டங்களின் விபரங்களும் பெறுகைத் திட்டத்தில் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் நடவடிக்கைககள் காலரீதியில் விபரித்து ஒழுங்கு முறையான விபரங்கள் பெறுகை கால அட்டவணை ஒன்றை நிறுவனம் தயாரித்திருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 26 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 07 பதவிகளில் 10 ஊழியர்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. மேலும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கையின் நீதிபதிகள் சட்டத்தின் பந்தியிலக்கம் 05(ஈ) இன் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்காக நூலக வசதிகளை வழங்கும் நிறுவனத்தின் அடிப்படை இலக்காக இருந்த போதிலும் நூலகர் ஒருவரின் பதவி மீளாய்வாண்டின் வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | நூலகர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக 2021 சனவரி 08 ஆந் திகதி பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் 435 விண்ணப்பங்கள் எங்களுக்கு கிடைத்திருந்தது. 03/2021 மற்றும் 03/2022 சுற்றறிக்கையின் மூலம் ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டமையால் இந்த ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயலாற்றலுக்கு உரிய பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PE /COP/POLI/Circular மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2023 செப்தெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் பட்டோலை I இன் பிரகாரம் உபாய வழித் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 நவம்பர் 16 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட "அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூல்" இன் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகளை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை நீதிபதிகள் நிறுவகம் பொது முயற்சிகள் அல்லாது இருந்ததாகவும் அறித்தருகின்றோம் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் பட்டோலை I இன் பிரகாரம் நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் செயல் நடவடிக்கைத் திட்டம் உரிய அமைச்சிற்க அனுப்ப வேண்டியிருந்த போதிலும் நீதி அமைச்சிற்கு 2021 திசெம்பர் 29 ஆந் திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் 2022 யூன் 22 ஆந் திகதி நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பந்தி இலக்கம் 40(1) இன் பிரகாரம் நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்ளுவதற்காக அந்த நிறுவனத்தின் நிர்வாக சபையினால் நியமிக்கப்படுகின்ற தமது உள்ளக கணகாய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எமது நிறுவனத்தால் 2021 சனவரி 26 ஆந் திகதி உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒன்றை ஏற்படுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 71 மாதிரிப் படிவம் தயாரிக்கப்பட்டு நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆதற்கு பதிலாக எமது நிறுவனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு நீதியமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் பிரிவின் மூலம் பொதுவான பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றமையால் தனியாக உள்ளக கண்ககாய்வாளர் நியமிக்கும் தேவையொன்று இல்லாதிருந்தாக 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி நீதி அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் பட்டோலை I இன் 03 இன் பிரகாரம் பிரதான பாதீட்டில் உள்ளடக்க வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட வருமானக் கூற்று, எதிர்பார்க்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |